## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை - 2017

---

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1984 இன் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தின் 12(4) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2018 ஜுன் 28 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 01**

நிதியத்தின் 95(இ) ஆம் பந்தியின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 90,687,716 தொகைக்கான தேறிய சொத்துக்கள்/ ஒதுக்கத்தின் தன்மை மற்றும் குறிக்கோள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 90 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண வகுப்பு ஒன்றினை மீள்மதிப்பீட்டு பெறுமதிக்கு வெளிப்படுத்தியிருந்த சந்தர்ப்பத்தில், மீள்மதிப்பீடு செயற்படும் திகதி சுதந்திரமான பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவர் மூலம் செய்யப்பட்டதா எனவும் மற்றும் சொத்துக்களின் நியாயமான பெறுமதியினை மதிப்பீடு செய்யும் போது பயன்படுத்தப்பட்ட முறை மற்றும் முக்கியமான அனுமானங்களை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறாயினும் சபையினால் மோட்டார் வாகனங்கள் மீள் மதிப்பீட்டு பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்கான வெளிப்படுத்தல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 9 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்புக் கிரயமம் அல்லது நிகரச்தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதி காட்டப்பட வேண்டும். எனினும் நிறுவனத்தினால் இருப்புக்கள் கிரயத்திற்கு இனங்காணும் கொள்கையொன்று கடைபிடிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்தொகையின் பிரகாரம் பெறவேண்டிய இடர்கடன் மற்றும் விழா முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,813,971 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் பிரகாரம் அம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,801,536 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 12,435 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 51 வகையான காகிதாகிகள் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 834,186 தொகை எனினும் பௌதீக இருப்பு கணிப்பீட்டுச் சபை அறிக்கையின் பிரகாரம் அம்மீதி ரூபா 799,192 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 34,994 இற்கான விளக்கமளிக்கப்படாத வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

**2.2.4 தொங்கல் கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கில் ரூபா 480,900 இற்கான மீதியொன்று காட்டப்பட்டிருந்ததுடன் 4 வருடங்களை விட மியைான காலம் முதல் அவற்றை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | **விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|---|
| | | **ரூபா.** | |
| (அ) | பயிற்சி நிகழ்ச்சித் திட்ட ங்களின் செலவுகள் | 113,100 | பொலன்னறுவை, கல்கமுவ மஹவ மற்றும் அனுராதபுரப் பிரதேசங்களில் காணப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 237 அரச உத்தியோகத்தர்கள் பங்குபற்றியமை க்கான உறுதிப்படுத்தல் சான்றுகள் |
| (ஆ) | குறைந்த கால புனர் வாழ்வு முகாம்கள் செயற் திட்டத்திற்கான செலவுகள் | 1,224,385 | மொறட்டுவ மற்றும் ருவன்வெல்ல முகாம்களில் பங்குபற்றிய சேவை பெறுனர்களின் பெயர்ப்பட்டியல் |
| (இ) | பலவீன வைப்புக்கள் | 36,238 | காலப்பகுப்பாய்வு |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 1,782,060 தொகை பெறுமதியான முற்பண மீதிகள் 20 வருடங்களை விட கூடுதலான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாக்கோவை நிதிப் பிரமாணம் 571 | வைப்புச் செய்து 05 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 181,800 தொகைக்கான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 03/2015 இலக்கம் மற்றும் 2015 ஜுலை 14 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு (இ) | முற்பணங்கள் பெறப்பட்ட கருமங்கள் முடிவடைந்த உடனேயே அம் முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த ரூபா 47,800 தொகைக்கான முற்பணங்கள் குறிப்பிட்ட விடயங்களுக்குப் பயன்படுத்தப்படாமல் 07 நாட்கள் முதல் 34 நாட்கள் வரையான காலம் கையில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (இ) 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவை | |
| (i) 2012 ஆகஸ்ட் 8 ஆம் திகதிய திருத்தங்களில் வழிகாட்டல் 2.8.1(ஆ) | மீளாய்வாண்டின் போது ரூபா 338,215 தொகைக்கான மின்அஞ்சல், யூபீஎஸ் மற்றும் நிழற்பிரதி இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு விடயம் தொடர்பான விஷேடத்துவ அறிவு உடைய அங்கத்தர் ஒருவர் நியமனம் செய்திருக்கவில்லை. |
| (ii) வழிகாட்டல் இலக்கம் 7.12.2(அ) மற்றும் (ஆ) | கணினி வர்ண அச்சு இயந்திரம், டிஜிடல் கமரா கொள்வனவு செய்யும் போது விலைகூறல்கள் சமர்ப்பித்திருந்த ஒரே ஒரு விலை கூறல்தாரர்களிடம் கொள்வனவு மேற் கொள்வதற்காக தொழிநுட்ப மதிப்பாய்வு குழு தீர்மானித்திருந்த போதிலும், வாழ்க்கைக் கால கிரயம் அதாவது பராமரிப்பு செலவுகள், சேவைகள், பொறுப்புச் சொல்ல வேண்டிய காலம் மற்றும் பொறுப்பு சொல்ல வேண்டிய காலம் மற்றும் கழிவுகள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. |
| (iii) வழிகாட்டல் இலக்கம் 2.5.1(ஊ) | தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் அறிக்கை பெறுகைக் குழு ஒன்றிற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 63,000 தொகை பெறுமதியான வர்ண அச்சு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iv) | வழிகாட்டல் 8.12.3(அ), (ஆ) மற்றும் (இ) | வழங்கப்பட்டிருந்த பொருட்கள் தொடர்பாக கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன்னர் நிலையப்பொறுப்பு அதிகாரியினால் அப் பண்டங்கள் மாதிரிகளுடன் மற்றும் ஏனைய இணங்கிய விதப்புரைகளுக்கு இணங்கியுள்ளன எனவும், வழங்கியிருந்த பண்டங்களின் எண்ணிக்கை ஒப்பந்த வேலை ஏற்பாடுகளுக்கு இணங்கியிருந்தன எனவும், அந்தப் பண்டங்களுக்காக வழமையாக வழங்கப்படும் பொறுப்புச் சான்றிதழ், பாதுகாப்பு சான்றிதழ் மற்றும் விஷேட கைநூலில் இணங்கியிருந்த வாறு வழங்கப்பட்டிருந்ததென சான்றிதழ் ஒன்று வழங்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறின்றி கணினிகள் மற்றும் மின்அஞ்சல் இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக ரூபா 982,605 தொகை செலுத்தியிருந்தது. |
| (ஈ) | 1978 திசெம்பர் 09 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | ரூபா 83.3 மில்லியன் தொகைக்கான சொத்துக்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருந்த போதிலும் அதனை நாளது வரை ஆக்கப்பட்டி ருக்கவில்லை. |

## 2.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பெறுகை திட்டத்தை மிகைத்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,181,946 இற்கான பெறுகைகளுக்காக 2017 அக்தோபர் 31 ஆம் திகதி நடைபெற்ற 178/2017 பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றதிற்கு இணங்க அடிப்படையில் அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும் திறைசேரியின் அங்கீகாரம் ஒன்று இன்றி ரூபா 348,930 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 34,080,828 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 37,183,014 தொகை காணப்பட்டமையினால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 3,102,186 இனால் குறைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 6,918,804 இனால் குறைந்திருந்த போதிலும் செலவுகள் ரூபா 10,020,989 இனால் குறைந்திருத்தல் மேற்கூறிய பற்றாக்குறை குறைவடைவதற்கு முக்கிய காரணமாக இருந்ததுள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 6,446,755 தொகையாகக் காணப்பட்ட பற்றாக்குறை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 34,080,828 தொகை வரை இடையறாது வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 67,539,371 தொகைக்கான சபையின் பங்களிப்பு மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 130,655,747 தொகை வரை இடையறாது வளர்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

சபையின் குறிக்கோள்கள் நிறைவேற்றிக் கொள்வது தொடர்பாக சபையின் ஒரு பிரிவு ஆகிய தேசிய போதைப்பொருள் ஆய்வு கூடத்தில் 9 பரப்புகளில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி ஹெரொயினில் புதிய ஐதாக்கல் அடங்கியுள்ளது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின் போது 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் போதைப்பொருட்கள் மற்றும் குற்றங்களை தடுக்கும் அலுவலகத்தின் மூலம் வழங்கியுள்ள ஈ - கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், போதைப் பொருட்கள் மற்றும் உளத்தூண்டல் பண்டங்களை இனங்காண்பதற்காக சட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு வெளிக்கள பரிசோதனை தொகுதிகள் தயாரித்தல் 10 சதவீதம் போன்ற மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டன.

(ஆ) 2017 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மேலதிக உணவுகள் சார் உற்பத்திகள் மாதிரிகள் பகுப்பாய்வுகளின் எண்ணிக்கை 13 மற்றும் அல்கொஹல் மாதிரிகளின் எண்ணிக்கை 74 எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றின் இலக்காகிய மாதிரிகளின் எண்ணிக்கைகளை குறிப்பிட்டிருக்காமையால் முன்னேற்றம் எவ்வளவு என கணக்காய்விற்கு உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(இ) விளையாட்டுகளின் போது பயன்படுத்தும் செயற்பாடுகளை அதிகரிக்கும் மருந்துகளின் ஜீவதத்துவ பரிணாம பண்டங்கள் அடங்கியுள்ளனவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட உயிரியல் விஞ்ஞான மாதிரி பகுப்பாய்வு, சட்ட நடவடிக்கைகளுக்காக விஞ்ஞானம்சார் சேவைகள் வழங்குதல் மற்றும் இலங்கை சுங்கத்திற்காக தொழில்நுட்ப உதவிகள் பெற்றுக்கொடுத்தல் போன்ற கருமங்கள் 2017 ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறுபேறுகளின் பிழையற்ற தன்மையைக் காட்டும் பரிசோதனையின் பெறுபேறுகள் கிடைக்க வேண்டியுள்ளதாக காட்டி அதனது செயலாற்றுகை 100 சதவீதம் எனக் காட்டப்பட்டிருந்தன.

### 4.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவி ஒன்றிற்கு ஆட்சேர்க்கும் போது உத்தியோகத்தர்களின் அடிப்படை தகைமைகளை பரிசோதனை செய்வதற்காக பரீட்சை பெறுபேறுகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி உறுதிப்படுத்த வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்காததுடன் 05 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளில் பரீட்சை சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகள் காணப்படவில்லை.

(ஆ) திருப்திகரமாகச் சேவைக் காலத்தை கவனத்தில் எடுத்து மற்றும் பரீட்சை சான்றிதழ்களை உறுதிப்படுத்திய பின்னர் உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டுமெனினும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் நான்கு உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் அறிவுரை உதவியாளர் ii தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு 03 வருடங்களில் வினைத்திறமை காண் தடைப் பரீட்சை சித்தியடைய வேண்டுமெனினும், நிறுவனத்தினால் குறிப்பிட்ட வினைத்திறமை காண் பரீட்டை நடாத்தப்படாமல் ஆலோசனை அறிவுரை பதவிக்கு 2013 ஆண்டின் போது நியமனம் பெற்றிருந்த உத்தியோகத்தர்களில் 10 பேருக்கு அறிவுரையாளர் பதவிக்கு பதவி உயர்வு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய போதைப் பொருள் ஆய்வு கூடத்தின் இருப்பு புத்தகங்களின் பிரகாரம் காணப்பட்ட 182 இரசாயனப் பொருட்கள் இடையே ரூபா 225,624 தொகை பெறுமதியான 12 வகையான இரசாயனப் பொருட்கள் காலவதியாகியிருந்ததுடன் 58 வகையான இரசாயனப் பொருட்கள் எனப்படும் 32 சதவீதம் அசையாத இருப்புக்கள் எனவும் காணப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் போது ரூபா 8,291,965 இற்கான பெறுமதிக்கான சபைக்கு வழங்கியிருந்த 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக இந்த அறிக்கை திகதி வரையம் பதில் அளித்திருக்கவில்லை.

(ஊ) நிறுவனத்தினால் மீண்டுவரும் செலவுகளுக்காக பேணப்படும் காசேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் 08 மாதங்களிலும் கையிருப்பு மீதி ரூபா 1 மில்லியன் முதல் ரூபா 4 மில்லியனுக்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதுடன் இந்தப் பணத்தை நிறுவனத்தின் குறிக்கோள்கள் நிறைவேறும் விதத்தில் பயன்படுத்துவதற்கு அல்லது ஆக்கபூர்வமான முதலீடுகளில் மேற்கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(எ) செயற்திட்டத்தின் நிதியத்தை செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பயன்படுத்துவதற்குப் பதிலாக, UNDCP 1995 செயற்திட்டத்தின் நிதியத்தில் இருந்து ரூபா 1,045,914 தொகை மற்றும் NDDCB RASH 71 செயற்திட்ட நிதியத்தில் இருந்து ரூபா 742,547 தொகை நிறுவனத்தின் செயற்திட்ட குறிக்கோள்களுக்கு புறம்பாக பணிப்பாளர் நாயகத்தின் வெளிநாட்டு பிரயாணங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஏ) சபையின் உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை உரிய முறையில் கணிக்கப்படாமையால் ரூபா 146,818 இற்கான தண்டப்பணமொன்று செலுத்த வேண்டியிருந்ததுடன் 05 ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை செலுத்தப்படாமையால் ரூபா 102,785 இற்ான மிகைவிதிப்பு தொகை ஒன்று செலுத்த நேரிட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டுத் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆகஸ்ட் முதல் தொடர்ந்து வரும் 05 மாதங்களுக்கான காகிதாகிகள் தேவையினை கவனத்தில் எடுத்து கொள்வனவு செய்திருந்த ரூபா 394,418 காகிதாகிகள் இருப்பொன்று 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 318,602 காகிதாகிகள் இருப்பு எனப்படும் 81 சதவீதம் மீதியாகக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது போதை பொருட்கள் பயன்படுத்துவோரை புனர்வாழ்வளிப்பதற்காக 6 முகாம்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் 3 முகாம்களுக்காக மருத்துவ சபையினால் முன்கூட்டிய பதிவுசெய்தல் அல்லது தற்காலிக பதிவு செய்தல் பெற்றிருக்காத மருத்துவர் ஒருவரின் மருத்துவ சேவையினைப் பெற்று அதற்காக ரூபா 28,500 தொகை செலுத்தியிருந்தது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான ஹோமகமவில் காணப்படும் ரூபா 2,971,405 தொகை கிரயத்தையுடைய 40 பர்சஸ் காணியை ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்கு பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் மாதத்தின் போது கிடைத்திருந்த ரூபா 1,266,768 தொகை பெறுமதியான தளபாடங்களுக்கான கொடுப்பனவு மேற்கொள்வதற்கு 2018 மார்ச் வரை திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தில் இருந்து பணம் கிடைக்காமையால் அப் பண்டங்கள் பயன்படுத்தப்படாமல் சபையில் ஒவ்வோர் இடத்திலும் பாதுகாப்பற்ற முறையிலும் கவனக் குறைவுடனும் வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 மார்ச் இறுதி அளவில் இடைநிறுத்தப்பட்ட போதைப்பொருள் பயன்படுத்துவோருக்கான புனர்வாழ்வளிக்கும் முகாம்கள் செயற்திட்டத்தில் ரூபா 2,220,197 தொகை பெறுமதியான உபகரணங்கள் தளபாடங்கள் மற்றும் ஏனைய பண்டங்கள் மீளாய்வாண்டு இறுதி வரையம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2017 ஜனவரி 11 திகதி, சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்திய பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பிரசுரிக்கப்படட்ட பத்திரிகை அறிவித்தலுக்காக ரூபா 1,588,213 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 24 பதவிப் பெயர்களைச் சேர்ந்த 83 வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ''2030 ஆண்டு நிகழ்ச்சி நிரழின்'' பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினதும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினால் தனது நோக்கெல்லையின் கீழ் வரக் கூடிய கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருந்தனர். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்கூறியவாறு 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரழ் தொடர்பாக தேசிய அபாயகர ஔடதக் கட்டுப்பாட்டு சபையின் அறிந்திருந்தமையினால் அதன் கருமங்கள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும் இலக்குகள் மீது நெருங்குவதை அளவை செய்வதற்காக சுட்டிகளையும் இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருந்ததாக குறிப்பிட்டிருந்த போதிலும் அந்த குறிக்கோள்களை செயற்படுத்துவது தொடர்பாக நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட உள்ளக சுற்றறிக்கை/ வழிகாட்டல் நிறுவனத்தில் காணப்படவில்லை.

(ஆ) ஏதேனும் கருமம் ஒன்றில் சரியான முறையில் செயலாற்றுகையை அளவை செய்வதற்காக சரியான தரவு அடிப்படை ஒன்று காணப்படல் அத்தியவசியமான எனினும், நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நெருங்குதலை அளவை செய்வதற்காக பிழையற்ற தரவு அடிப்படை ஒன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டதுடன் இதற்காக கணினிகள், இணையத்தள வசதிகள் போன்ற பௌதீக வசதிகள் போதியளவாக காணப்படாமையால் மற்றும் நிதி ஏற்பாடுகளை இனங்கண்டிருக்காமை ஆகிய விடயங்கள் காரணமாகியுள்ளன என மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நெருங்கவதற்கு தேவையான மூலவளங்கள் மற்றும் கொள்திறன்கள் இடையறாமல் பெற்றுக்கொள்வதற்காக இயலாமை ஆபத்தினை இனங்கண்டிருக்காததுடன் அந்த ஆபத்தினை குறைப்பதற்காக நிறுவனத்தினால் எடுக்க வேண்டிய செயற்பாடுகளையும் இணங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்கான வரைவு வருடாந்த அறிக்கை 2018 ஆகஸ்ட் 28 ஆம் திகதி அளவிலும் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

சபையினால் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு உத்தியோகத்தர் ஒருவர் இணைக்கப்பட்டிருந்த போதிலும் 2017 ஆண்டிற்கான கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 3.7.5 இன் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

#### 6.3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.5.1 இன் பிரகாரம் பெறுகை குழு ஒன்றின் மூலம் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கையை விதந்துரைத்தல் மற்றும் மீளாய்வு செய்தல் என்பன செய்யப்பட வேண்டுமெனினும் ரூபா 171,375 இற்கான உள்ளக நுகர்வு பண்டங்களின் கொள்வனவின் போது அவ்வாறு விதந்துரைக்கப்படாத தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் அறிக்கை மீது நிருவாக உத்தியோகத்தரினால் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 4.2.1(ஆ) இன் பிரகாரம் குறைந்த அளவு (03) மூன்று வருட காலத்திற்காக எதிர்பார்க்கம் பெறுகைகள் அலுவல்கள் உட்படுத்தப்பட்டு பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் சபையினால் 2017 ஆண்டிற்காக மாத்திரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் 2017 ஜுன் 29 ஆந் திகதி திருத்தியிருந்ததுடன் அத் திட்டத்தின் பிரகாரம் 2017 ஆண்டிற்கான பெறுகைகளுக்காக ரூபா 42,240,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபா 2,744,172 தொகை எனப்படும் மதிப்பீட்டுத் தொகையில் 6.5 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் 93.5 சதவீத பெறுகை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 18,150,000 தொகைக்காக நிர்மாண வேலை பெறுகை விடயங்கள் ஏதும் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் பெறுகை திட்டத்திற்கு உட்படுத்தியிருக்காத ரூபா 443,695 இற்கான நிர்மாணவேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பணம் செலுத்தப்பட்டிருந்தது.

### 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது பாதீடு செய்யப்பட்டிருந்த 15 செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 23,245,931 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் பாதீடு செய்யப்பட்டுள்ள 10 செலவு விடயங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 68,923,000 தொகையில் இருந்து எதுவித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 16 செலவு விடயங்கள் தொடர்பாக 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபை தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) | நிதி முகாமைத்துவம் | செயற்படாத வங்கி கணக்குகளில் காணப்படும் மீதிகள் பயன்தரும் கருமங்களுக்காக பயன்படுத்தி யிருக்காமை. |
| (இ) | மனித வள முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (ஈ) | செலவுக் கட்டுப்பாடு | திட்டமிடப்படாமல் விடயங்களை மேற்கொள்ளல். |
| (உ) | பெறுகை | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்படாமை. |
| (ஊ) | இருப்புக் கட்டுப்பாடு | இருப்புக்களின் தேவையை இனங்கண்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (எ) | கோவைகள் நிருவாகம் | தனிப்பட்டட கோவைகளின் சான்றுபடுத்தப்பட்ட பரீட்சை சான்றிதழ்கள் காணப்படாமை மற்றும் பதவிகளுக்காக ஆட்கள் சேர்க்கும் போது குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து பரீட்சை சான்றிதழ்கள் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. |